# மாகாணக் கல்வித் திணைக்களம்

**வடக்கு மாகாணம்**

**Provincial Department of Education, Northern Province**

**மூன்றாம் தவணைப் பரீட்சை : 2025**

**தமிழ் இலக்கிய நயம்**

**தரம் - 11** **மூன்று மணித்தியாலங்கள்**

*மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்*

**அறிவுறுத்தல்கள் :**

பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்
   கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇக்"

   அ. முளிதயிர் என்பது யாது?

   ……………………………………………………………………………..

   ஆ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?

   ……………………………………………………………………………..

2. "குமரனும் என் பால் குடித்து வளர்ந்தவன்….! உனக்கு ஏன் இவ்வாறு வெறிவந்துவிட்டது?",

   அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

   ……………………………………………………………………………..

   ஆ. இங்கு "வெறி" என எதனைக் குறிப்பிடப்பட்டுள்ளது?

   ……………………………………………………………………………...

3. "உள்ளம் போய் நாண் போய் எரை போய் வரி நெடுங்கண் வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர் போல் - பிள்ளை மீன்"

   அ. இப்பாடலைப் பாடியவர் யார்?

   ………………………………………………………………………………

   ஆ. இது எக்காலத்திற்குரிய பாடல்?

   ………………………………………………………………………………

4. “மன்னர் உலகத்து மண்ணுதல் குளித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாய்மாந்தனரே”
அ. இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் எது?

……………………………………………………………………………..

ஆ. இங்கு கூறப்பட்டுள்ள விடயம் யாது?

……………………………………………………………………………..

5. “உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங் கொண்டடித்தல்”

அ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணியை விளக்குக.

……………………………………………………………………………..

ஆ. இவ்வரியின் பொருளைக் குறிப்பிடுக?

……………………………………………………………………………...

(5 X 4 = 20 புள்ளிகள்)

02. கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அவரது ஆதர்சனமான அழகு அவரது இறப்பிலும் தலைமாட்டில் நின்றெரியும் காலதீபத்தின் அமர விளக்காக எரிந்து கொண்டிருக்கிறது. தனிப்பட்ட வாழ்க்கையைத் தவிர்த்து ஒரு கலைஞனாகக் கனவுகளை முழுமையாக நிறைவேற்றியவனது பயணம் அவருடையது. அவர் கடைசிவரை அவருடைய வேலைகள் அனைத்தையும் தனி ஒருவராகவே தனி ஆளுமையாகவே செய்திருக்கிறார். பாலுமகேந்திரா சினிமாப் பட்டறை, திரைப்படத் தயாரிப்பு, இயக்கம் இவற்றோடு விழாக்களில் பங்கெடுப்பது, வெளிவிவகாரங்கள் இவை எவற்றுக்கும் அவர் யாரையும் அடுத்த நிலையில் பிரதானமாக வைத்துக்கொண்டதில்லை. இதற்கு நம்பிக்கை ஒரு காரணம் அல்ல. மாறாக அவர் தன் காரியங்களைத் தானே நேரடியாகச் செய்யவிரும்புவார். பாலுமகேந்திரா சினிமாப் பட்டறைக்குக் கூட அவர் நடிப்புத் தவிர்த்து இதர வகுப்புக்களுக்குக் கூட வேற ஆசிரியர்களை நியமிக்கவில்லை. கிட்டத்தட்ட தனி மனிதனாகவே அவர் தன்னையும் தான் சார்ந்த செயற்பாடுகளையும் நிர்வகித்துக் கொண்டார். 74 வயதில் ஒருவர் அப்படி நடந்து கொண்டது அக் காரியங்களுக்குள் அவர் கொண்டிருந்த ஈடுபாடு, பிடிப்பு இவற்றைத் தாண்டி அக்காரியங்கள் அவர் தனது இறுதிநாளுக்கு முன்பாக தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் என்ற உணர்வோடு செயற்பட்டமைதான் அதற்கு காரணமாக இருந்து வந்திருக்கிறது.

குரசேவாவின் “இகிரு” படத்தின் நாயகன் போலத்தான் அவருடைய தீவிரம் இருந்து வந்தது. அப்படத்தில் நாயகன் “வாட்டனபே” வயது முதர்ந்த நகராட்சி அதிகாரி. இறப்பு நெருங்கிவிட்டதொரு தருணத்தில் இதுவரை வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உண்டாகிவிடும் மனப்பிரயாசையுடன் அவர் உழன்று கொண்டிருப்பார். இறுதியில் ஏழை மக்கள் வசிக்கும் பகுதியில் சிறுவர்களுக்கான பூங்கா ஒன்றை நிர்மாணித்து விடுவதென முடிவெடுத்து அக்காரியத்தில் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொள்வார்.

அ. பாலுமகேந்திராவின் ஆளுமைகள் எவை?

…………………………………………………………………………………..………

……………………………………………………………………………………………

…………………………………………………………………….………………………

(4 புள்ளிகள்)

ஆ. தானே எல்லாவற்றையும் செய்யக் காரணம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

(4 புள்ளிகள்)

இ. வாட்டனபே யின் செயல் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………..

..……………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

ஈ. இவ் உரைப் பகுதியின் மொழிநடையின் சிறப்பினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………..……………………………………

………………..………………………………………………………………………

……………..…………………………………………………………………………

……………………………………………………………………………………………

……

(6 புள்ளிகள்)

**அல்லது**

ஒரு ஆடுகுதிரையின் மீது
ஒரு குழந்தை ஆடுகிறது
அது மரக்குதிரை
குழந்தையின் ஸ்பரிசம் அறியாதது
குழந்தை குதிரையை அடிக்கிறான்
தனது திறமையைக் கண்டு
தன்னையே மெச்சிக்கொள்கிறான்
அவன் வளர்ந்து பெரியவனாகிறான்
மரக்குதிரையில் மீண்டும் சவாரிசெய்கிறான்
ஒரு சடங்கின் மூலம்
தன் இளமையை அறிவிக்கிறான்

இரவு கழிந்ததும்
குதிரை உருமாறுகிறது
தன்னைத்தானே மெச்சிக்கொள்கிறவன்
மாறாமலே இருக்கிறான்
எஜமானனாக,
சவாரி செய்பவனாக,
கணவனாக.

அ. குழந்தையின் செயற்பாடு யாது?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…(4 புள்ளிகள்)

ஆ. மரக்குதிரையில் மீண்டும் சவாரி செய்கிறான் என்பதில் வெளிப்படுத்தப்படும் விடயம்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

(4 புள்ளிகள்)

இ. தன்னைத்தானே மெச்சிக் கொள்ளக் காரணம் யாது?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

ஈ. பெண்கள் மீதான அடக்குமுறை வெளிப்படுவதை எடுத்துக்காட்டுக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

## பகுதி – II

முதலாம் வினாவிற்கும் ஏனைய 2,3,4,5 ஆம் வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக, மொத்தமாக **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01. பின்வரும் கவிதையை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள தொடர்களின்/ வழிகாட்டற்குறிப்புக்களின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.

வெண்டை விரல்கள் விறைத்திடின் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும், - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
களிள்வோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் "கிறுக் கிறுக்" கோசையிலே – நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில், - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தரகள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலைபடைப்போம்!

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனும் தீய போக்கொழித்து : இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்!

பெண்ணுக்கு இங்கோர் தனிநீதி – என
பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை
மண்ணில் புதைத்து மகிழ்ந்திடுவோம் - நவ
மாதர் அறங்கள் படைத்திடுவோம்!

போலித் தலைமை பொசுக்கிடுவோம் - இவர்
பொய்மைத் திரையைக் கிழித்தெறிவோம்!
பாலித்திடுவோம் புதுயுகத்தை, மலைப்
பாவையர் வாழ்வில் உயர்ந்திடுவோம்!

அ. மலையகத் தொழிலாளிப் பெண்களின் கடின உழைப்பு
ஆ. பெண்களின் விடுதலை
இ. பெண்களின் உரிமைகள் பற்றிய சிந்தனைகள்
ஈ. இங்கு கையாளப்பட்டுள்ள அணிகளின் பயன்பாடு
உ. கவிதை வெளிப்பாட்டு முறையின் சிறப்பு

(5 X 6 = 30 புள்ளிகள்)

02. உரிமையும் கடமையும் என்ற கட்டுரையில்,
அ. உரிமைக்கும் கடமைக்கும் இடையிலான தொடர்பு
ஆ. ஆசிரியர் தனது கருத்தினை வெளிப்படுத்த கையாண்ட உத்திகள்
என்பவற்றை விளக்குக.
(15 புள்ளிகள்)

03. ‘‘கிட்கிந்தைப் படலத்தில்..’’
அ. இலக்குவணன் கிட்கிந்தைமலை நோக்கி வரும்போது கிட்கிந்த மலையின் காட்சிகள்
ஆ. தாரையின் தோற்றமும் அழகும்
என்பவற்றை விளக்குக.
(15 புள்ளிகள்)

04. துார் என்ற கவிதையில்,
அ. துார் எடுக்கும் போது கிணற்றிலிருந்து கிடைக்கப் பெற்றவை.
ஆ. வேலைக்காரி தொடர்பான விம்பம்
என்பவற்றை விளக்குக.
(15 புள்ளிகள்)

05. புகழ் வேட்டை என்ற கட்டுரையில்,
அ. மூவேந்தர்கள் பற்றி புறநானூற்றில் கூறப்பட்டுள்ளவை
ஆ. தலைப்புப் பொருத்தப்பாடு
என்பவற்றை விளக்குக.
(15 புள்ளிகள்)